R 5913 (Page 189)

# நம் கர்த்தராகிய இயேசுவின் உத்வேகமளிக்கும் வாக்குத்தத்தம்

# OUR LORD JESUS' INSPIRING PROMISE

திறவுகோல் வசனம் : நீ மரணபரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்" - வெளிப்படுத்தல் 2:10

நம் மகிமையடைந்த கர்த்தரால், வெளிப்படுத்துபவராகிய பரிசுத்த யோவான் மூலம் பத்மு தீவிலிருந்து கொடுக்கப்பட்ட வார்த்தைகளே இவைகளாகும். இந்த திகைப்பூட்டும் புத்திமதிகள், ஒரு விசேஷித்த ஒப்பந்தத்திற்குள் நுழைந்திருக்கின்ற, கர்த்தரோடு ஒரு விசேஷித்த உடன்படிக்கை செய்துகொண்டவர்களாகிய சபைக்கு கொடுக்கப் பட்டவைகளாகும். நாம் அவரோடுகூட ஆளுகை செய்வதற்கு, இயேசுவோடு துன்பப்படவேண்டும் என்ற தற்காலத்து அழைப்பு, அவரது சரீரத்தின் அங்கமாகுதலை அடைவதை குறிப்பாக சுட்டிக்காட்டுகிறது. அவரது சீஷர்களே அவரது சரீர அங்கங்களாவர். அவர்கள் அவரது அடிச்சுவடுகளில் நடந்துவரும்படி அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

R5914 : page 189

இவர்கள் விசுவாசத்தைப் பற்றிக்கொண்டவுடன் அதில் நிலைத்திருக்க வேண்டுமானால், முதலாவதாக அர்ப்பணிப்புக்கு வழிநடத்தப்படவேண்டியது அவசியமானது.இவர்கள் நற்கீர்த்தியிலும் துர்க்கீர்த்தியிலும் தங்களது குரு தங்களை எவ்விடத்துக்கு நடத்தினாலும் இந்த நோக்கத்தில் தொடர்ந்து பின்செல்லவேண்டும். பிரயாணத்தின் எல்லையை அடையும் முன்பாக, இவர்கள் தளர்ச்சியுறக்கூடாது. உலகம், மாம்சம் மற்றும் விரோதி ஆகியோர் தாங்கள் பெற்றுக்கொண்ட இந்த அழைப்பு புரியாததும், அடையக்கூடாததுமான ஒன்று என்று எச்சரிக்கவும், இவர்களது மனதை திசைதிருப்பவும், பின்நோக்கிச் செல்லவும் முயற்சிப்பார்கள்.

ஒரு உண்மையுள்ள ஊழியக்காரன், தன் எஜமானிடத்தில் நம்பிக்கை பெற்றவனாக தன் தகுதியை நிரூபித்து, எப்பொழுதும் அதே நம்பிக்கையை காத்துக்கொள்வான். நாம் அனுதினமும் நமது நேர்மையை அல்லது நேர்மையற்ற தன்மையை நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்.

"உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை பரீட்சிப்பாராக" நாம் தகுதியுடையவர்களா என்று அவர் அறிவதற்காகவும், எல்லாவற்றைக்காட்டிலும் அவரை நேசிக்கிறோமா, அல்லது சுயத்தை நேசிக்கிறோமா என்று காணும்படிக்கும், நாம் அவர்பேரில் அப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருப்போமானால், அவர் கொடுக்கக்கூடிய இந்த மாபெரும் பரிசை ஜெயங்கொள்ளும்படிக்கு எல்லாவற்றையும் ஒதுக்கி, விட்டுவிடுகிறோமா என்றும் நம்மை பரீட்சிக்கிறார். இந்த ஜீவகிரீடமாகிய அழகான காரியத்தை கிரகிக்க முயற்சிக்கிறோமா என்றும் அவர் காண்கிறார், பரீட்சிக்கிறார்.

அவரது உவமைகளுள் ஒன்றில், நம் கர்த்தர் சிலரை பிரதிநிதித்துவப்படுத்தி, சூரியனாகிய உபத்திரவம் எழும்போது, அவர்கள் நீதியின்கொள்கைகளில் நிற்பதில் போதுமான நேர்மையும் உண்மையும் உடையோராக இல்லை என்கிறார். அவர்கள் குற்றம்செய்தோராயினர். அவர்கள் அழிவுக்குள்ளாயினர். ஆகவே, உண்மையுள்ளோர் என்ற வார்த்தை குறிப்பாக நேர்மை மற்றும் உண்மையை அடையாளப்படுத்துகிறதாய் தோன்றுகிறது. அதோடுகூட, முழு விசுவாசத்தை உடையோராயிருத்தலையும் சேர்த்து பொருள் தருகிறது. தேவனுடைய பிள்ளைகள் முழு

விசுவாசத்தோடு காணப்படவேண்டும். அதோடுகூட, யார் தன் முழு பற்றுறுதியை வெளிப்படுத்தி, தகுதியுடையவரென்று நிரூபிக்கிறாரோ, அவர்களிடத்திலேயே தேவன் நம்பிக்கை வைக்கிறார்.

யார் தம் ஓட்டத்தின் முடிவுவரை முழு விசுவாசத்தோடு இருக்கிறார்களோ, அவர்களைப்பார்த்து நம் கர்த்தர் கூறுவார்; நல்லது உத்தம ஊழியக்கரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால், அநேக பட்டணங்களின்மேல் உன்னை அதிகாரியாக்குவேன்"- லூக்19:17. இவர்களே ஜீவ கிரீடத்தை பெறப்போகிறவர்கள். மரணபரியந்தம் இவர்களது நேர்மையும் உண்மையும் சோதிக்கப்படவேண்டும். இவ்வாறு சொல்லுவது, அவர்கள் கர்த்தரோடு செய்துகொண்ட பிரதிஷ்டையின் பொருட்டு மரிப்பார்கள் என்று பொருளாகாது. இவ்வாறு மரிப்போரில் இரண்டு வகுப்பார் இருப்பர் - ஒன்று சிறுமந்தை, இவர்கள் பலியின் நிமித்தமாகவே மரிப்பார்கள். அடுத்து திரள்கூட்டத்தார் - கர்த்தராகிய இயேசுவின் நாளில் காக்கப்படும்படி இவர்களது மாம்சம் அழிவுக்குள்ளாகி, ஆவியோ இரட்சிப்படையும்.

ஆகவே, மரணபரியந்தம் என்று நம் ஆதார வசனத்தில் கூறப்படும் பொருள் என்னவெனில், பலி மரணத்தில் நிறைவடையும்வரை விசுவாசத்தில் உண்மையாக நிலைநிற்பது ஆகும். எந்த நேரத்திலும் மரணத்தை சந்திக்க ஆயத்தமாயிருத்தலாகிய விசுவாசத் தன்மையாகும். முற்றிலும் தகனமாகும்வரை பலியின் உடன்படிக்கையை செய்து முடிக்க இது வழிநடத்தும்.

## வாடாத ஜீவகிரீடம்

மாபெரும் கனம் அருளப்படுவதையே ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வதைப்பற்றிய சிந்தனை வெளிப்படுத்துகிறது. பழங்காலத்து ஒலிம்பிக் விளையாட்டுக்களில் ஜெயித்தோருக்கு கொடுக்கப்படும் கிரீடம் பொதுவாகவே என்றும் பசுமையாக இருக்கும் இலைகளால்(டுயரசநட டநயஎநள) செய்யப்பட்டிருக்கும். மேலும் யுத்தங்களில் மாபெரும் வெற்றிபெற்றோருக்கு என்றும் பசுமையாக இருக்கும் இலைகளாலான கிரீடத்தையே கொடுத்து கனப்படுத்துவர். புன்னைமரம்(டுயரசநட வசநந) என்றைக்கும் பசுமையான மரமாகும். இது நிலைப்புத்தன்மைக்கு அடையாளமாய் உள்ளது. உண்மையுள்ள சபைக்கு அருளப்படும் மேலான கனத்தை சித்திரக் காட்சியாக அப்போஸ்தலர் இங்கு இதை விளக்கியிருக்கிறார். மாபெரும் பரிசு அவர்களுக்கு கொடுக்கப்படவுள்ளது. இப்பொழுது தெரிவுசெய்தல் நடைபெற்று வருகிறது. தன் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தவேண்டியது ஒவ்வொருவரது பணியாக உள்ளது - 2பேதுரு1:10,11.

வெற்றிவாகை சூடிய ஒவ்வொருவருக்கும் ஜீவகிரீடம் அளிக்கப்படும். இது விரைவில் வாடிப்போகும் கிரீடமல்ல, அல்லது ஒருசில வருடங்கள் மட்டுமே நிலைத்திருக்கும் கிரீடமல்ல, மாறாக நித்தியகாலத்துக்கும் நிலைத்திருக்கும் கிரீடமாகும். அதுமட்டுமல்ல, இந்த நித்திய ஜீவகிரீடம் உயர்தரமான ஜீவிய கிரீடமாகும். இது மிக உன்னதநிலைமையின் ஜீவன்ஆகும். ஆயிரவருடாட்சியில் நடைபெறும் திரும்பக்கொடுத்தலின்போது, மனுக்குலம் மனிதநிலைமையில் நித்திய ஜீவன்பெறுவர். தேவதூதர்களோ ஆவிக்குரிய நிலைமையில் நித்திய ஜீவனை சுதந்தரிப்பர். ஆனால் "முற்றிலும் ஜெயங்கொண்டவர்களுக்கு" கொடுக்கப்படும் ஜீவகிரீடமோ மற்ற ஜீவிய நிலைமையைக்காட்டிலும் மிக உயர்ந்ததும், இந்த பந்தயசாலையில் ஜெயித்தவர்களுக்கென ஒரு விசேஷ வெகுமதியாகிய மிக உன்னதமான தன்மையை உடைய, சாகாமை வாய்ந்த ஆவிக்குரிய ஜீவனாகும்.

"பெற்றுக்கொள்ளத்தக்கவர்களாக ஓடுவோம்"
இலக்கு மிக சமீபம்

அச்சமின்றி முன்னேறியே ஓடு, என் ஆத்துமாவே கடமை
உன்முன் அங்கே ஒளிவீசும்
வனாந்தரங்கள் உன்னைச் சுற்றிலும் அனல் கக்கினாலும்
யோர்தான்கள் அலைபோல் பாய்ந்து சீற்றங்கொண்டாலும்
யோர்தானின் இப்புறத்து நிலம் உன் புத்திரசுவீகார
ஆசீர்வாதம் அல்ல,
விரைந்து முன்னேறு, உன் கானானை கண்டடைவாய்,
அங்கே இளைப்பாறுதலில் பிரவேசிப்பாய்

--------------------

See more Books & Articles at  www.foodfornewcreature.com